# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:3 Issue : 11 July 2021

கோட்டை :3 வாயில்:11 ஜூலை 2021

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X

# Aran

International e Journal of Tamil Research

ISSN: 2582-399X



## ஆசிரியர் குழு

முனைவர் வாணிஅறிவாளன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் V.வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் P.பாண்டிக்குமார்



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# நன்றி

**அனைவருக்கும் வணக்கம்**

**நமது அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் மூன்றாவது ஆண்டில் (2021) அடி எடுத்து வைக்கின்றது. எங்களுடன் பயணித்த அனைத்து பேராசிரியர் பெருமக்களுக்கும், துறைசார் வல்லுநர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் எங்களது பணிவான நன்றியை தெரிவித்துக்கின்றோம். தொடர்ந்து உங்களது ஆதரவை எங்களுக்கு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.நன்றியும் பேரன்பும்.**

*Hi everyone*

*Aran Internaitional e Journal of Tamil Research continuings way into third year(2021) . We area greatful to all the professors,academics and research students who travelled with us. We warmly request you to continue to support us . Thank you with Love.*

**அன்புடன்**
**முனைவர். பிரியாகிருஷ்ணன்**
**நிறுவனர்/பதிப்பாசிரியர்/நிர்வாகஆசிரியர்,**
**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்**
*www.aranejournal.com*
*aranjournal@gmail.com*
*PH: +917299587879*

# அகத்தினுள்


**பத்துப்பாடல்கள் சுட்டும் இசைக் கருவிகள்**
திரு. மதி ஜனனி செந்தூரன்

**குறுந்தொகையில் உவமைச் சிறப்பு**
முனைவர் மு. விஜயலெட்சுமி,

**குறுந்தொகைக் காட்டும் தகையணங் குறுத்தல்**
முனைவர் த.தேவகி

**தமிழரின் கடல் எல்லை தாண்டுதலும், பெண்கடல் செலவு மறுப்பும்**
முனைவர் இரா. ஜெயஸ்ரீ

**கம்பன் விருத்தங்களில்யாப்பு**
முனைவர். ஜெ. கவிதா.

**சிலப்பதிகாரம் காட்டும் சமூகம்**
முனைவர். ரா. ராமேஸ்வரி

**திருக்குறள் காட்டும் பகைவெறி எதிர்ப்பியல் சிந்தனைகள்**
திருமதி சு.சத்யா

**ஆசாரக் கோவையும் அறிவியலும்**
முனைவர் பெ.இராஜலட்சுமி

**ஏலாதி கூறும் வாழ்வியல் அறங்கள்**
முனைவர் க.அலமேலுமங்கை

**அணி இலக்கண நோக்கில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**
திருமதி.பா.தீபா

**விவிலியமும் சித்தர் இலக்கியமும் கூறும் மனித படைப்பு**
ச.சு.அருள்பிரகாஷ்

**இயேசு பிறப்புக் கதைப்பாடல்கள்**
தா.மதன்



முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்


**முகம் மலர்தலே விருந்தோம்பலின் முதன்மைப் பண்பு**
முனைவர் க. மங்கையர்க்கரசி

**சிற்பங்கள் காட்டும் கொற்றவை வழிபாடு**
கி. சரவணன்

**கைவல்ய நவநீதத்தில் பிரம்மம் பற்றிய கருத்தியல்கள்**
முனைவர் சயனொளிபவன். முகுந்தன்

**ஞானசம் பந்தரின் வருகையும் திட்டக் குடியும்**
முனைவர் பெ.சுப்ரமணியன்

**இந்துப் பண்பாட்டு மரபில் பெண்கள் நிலை-வடமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்ட நோக்கு**
கலாநிதி விக்னேஸ் வரிபவநேசன்

**உள்ள வழிபாடுகளே உருவ வழிபாடுகள்**
மு.பெருமாள்

**பிடுங்கி நடப்பட்ட நிலத்தில் முளைக்கத்துடிக்கும் உயிர்ப்பின் பச்சை.. (புகலிடக் கவிதைகளின் செல்தடம் குறித்த ஆய்வு**
பேரா.தெ.வெற்றிச்செல்வன்

**டாக்டர்தா.ஏ.ஞா. அவர்களின் இலக்கியத் திறனாய்வியல் நூலின் ஓட்பநுட்பங்கள்**
முனைவர் வே. விக்னேசு

**நெடுங் குருதி நாவல் காட்டும் களவும் கள்வர்வாழ்வும்**
முனைவர் அ.ரேவதி.

**ஜெயமோகனின் நாவற்கோட்பாட்டு விதிகளும், அவருடைய நாவல்களும் (ஜெயமோகனின் 'நாவல்' இலக்கியத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)**
முருகையா சதீஸ்


முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்

**தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்**
முருகையா சதீஸ்

**தூப்புக்காரி நாவலும் கதைமாந்தர்களும்**
வினோ ராஜ். லா

**இலக்கியங்கள் முன்னெடுக்கும் பொதுமக்கள் நுகர்வுப் போக்கு**
முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி.

**தமிழ் மொழி: கற்றலின் தேவையும் கற்பித்தலில் சிக்கலும் - சிலவிவாதங்கள்**
முனைவர் அ.இலட்சுமிதத்தை.

**அழகர் குறவஞ்சியில் இயல் இசைச் சிறப்புகள்**
முனைவர் செ.லலிதாம்பாள்

**சீவகசிந்தாமணி-நடன நோக்கில் விமலியார் இலம்பகம்**
முனைவர் ஜி.ஜே. லீமாரோஸ்

**சிலப்பதிகாரம் கூறும் விலக்குறுப்பும் நடன வடிவமைப்பும்**
முனைவர் கு.சகாயராணி

**THE GREAT EXHIBITION OF THE INDUSTRY AND ART OF ALL NATIONS (LONDON, 1851)**
Dr. S. Purushothaman

**உடுமலை பீரங்கி வார இதழ் - ஓர் ஆய்வு**
முனைவர் ப. கற்பகவள்ளி

**சங்ககாலம் - சேலம் மாவட்டம் ஒருபார்வை**
முனைவர் இரா.ரமேஷ்

**உயிருடன் புதைக்கப்பட்டப் பெண்கள் -தாமரைப் பாக்கம் கல் வெட்டுகள் முன் வைத்து மீள்பதிவு**
முனைவர் பிரியாகிருஷ்ணன்

முகப்பு

புகைப்படம் இணையம்

நன்றி



# தமிழ்

# விவிலியமும் சித்தர் இலக்கியமும் கூறும் மனித படைப்பு

## *Portrayal of Creation of Man in Bible and Siddhar Literaturek*

கட்டுரையாளர்

ச. சு. அருள்பிரகாஷ்,

முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழ்ப் பல்கலைக் கழகம்,

தஞ்சாவூர்.

நெறியாளர்

முனைவர். பொ. சுரேஷ்,

உதவிப் பேராசிரியர்,

தமிழ்ப் பல்கலைக் கழகம்,

தஞ்சாவூர்.

*Abstract*

*Bible says that God created Humanbeaings from the soil of the ground and gave His life to him. Similarly sidhars like pambatty, kudambai and many others also says the same way. Human birth is a noble one asserts both the bible and sidhars my essay emphasis this topic.*

*Key words ; Bible, sidhars, creation, man, God.*

**முன்னுரை:**

இறை நம்பிக்கையானது அனைத்து சமயங்களுக்கும் அடித்தளமாக உள்ளது. இறைவன் அனைத்தையும் படைத்துப் பாதுகாப்பவராக பல்வேறு சமயங்கள் கூறுகின்றன. இக்கருத்தை அறிவியல் நோக்கில் குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற பரிணாமக் கொள்கையை முன்னிறுத்துகின்றன. இப்படியிருக்க விவிலியமானது மனிதனை படைப்பின் மணிமகுடமாக இறைவன் படைத்துள்ளார் என்று ஆணித்தரமாகக் கற்பிக்கின்றது. அவ்வண்ணமாக தமிழ் இலக்கியங்களில் தனிச் சிறப்பு பெற்று விளங்கும் சித்தர் பாடல்களில் இக்கருத்து எதிரொலிப்பதைக் காணலாம். இங்கே மனிதப் படைப்பை பற்றிய சிந்தனையை விவிலியம் மற்றும் சித்தர் பாடல்களின் வழி ஒப்பு நோக்கி காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**விவிலியப் பார்வையில் மனிதப் படைப்பு**

மனிதன் இறைவனால் படைக்கப்பட்ட ஓர் உயிரி. ‘ஆதாம்‘ என்றாலே ‘மண்’ என்று தான் பொருள்படுகின்றது. ‘மண்’ என்பதற்கு தமிழில் ‘நிலைத்த’ என்று பொருள்படும். சமற்கிருதத்தில் இதே பொருளில் ‘மனுஷ்’ என்று மனித இனத்தைச் சுட்டுகிறது. ‘எபிரேய மொழியில் ‘அதாமா’ , ‘ஆதாம்’ , ‘ஈஷ்’ ,‘எனோஸ்’ ‘கெவர்’ என்றும் கிரேக்க மொழியில் ‘அந்ரோப்போஸ்’,‘அனீர்’ ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.’ (வி.வி.இ.செ.க.கோ, ப.265) ‘எல்லாப் பொருள்களையும் கையாளும்படிப் பகுத்தறிவு ஆத்தும தேகியாகிய மநுமக்களை இறைவன் படைத்தார்.’ (எ.ஆ. கிருட்டிணபிள்ளை, இரட்சணிய சமய நிருணயம், ப. 27) மனிதர் பூமியை ஆளப்பிறந்தவர்கள் என்பது பின் நாட்களில் இது விளக்கம் பெற்றது என்பர். மனிதன் இறைவனையே சார்ந்து வாழ வேண்டியவன். தரையிலிருந்து எடுத்த மண்ணினாலே இறைவன் மனிதரைப் படைத்து உயிர் மூச்சை அவன் நாசியில் ஊதினார், மனிதன் உயிருள்ளவனானான் (தொநூ 2:7). மண்ணில் 96 மூலப்பொருட்கள் அடங்கியுள்ளனவாக ஆராயப்பட்டுள்ளது. அதுபோலவே மனிதனுடைய உடலிலும் 96 மூலப்பொருட்கள் அடங்கியுள்ளன. அவைகள் மண்ணிலுள்ள மூலப்பொருட்களுக்கு ஒப்பான அதே மூலப்பொருள்கள்தான். இது படைப்பின் அதிசயமான மெய்ப்பித்துக் காட்டலாகும்.

‘இறைவன் மனிதனை மட்டுமல்ல மிருகங்கள் பறவைகள் ஆகியவற்றை மண்ணிலிருந்து உருவாக்கினார், இதோ உம்மைப் போல நானும் இறைவனால் உண்டானவன். நானும் மண்ணினால் உருவாக்கப்பட்டவன், என் சுவாசம் என்னிலும் தேவன் தந்த ஆவி என் நாசியிலும் இருக்கு மட்டும், என்றும் மனிதனுடைய இறுதி நிலையைப் பற்றி விவிலியம், நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய், மண்ணினின்று வந்த உடல் மண்ணுக்கே திரும்பு முன்னும், கடவுள் தந்த உயிர் அவரிடமே திரும்பு முன்னும்..., மானிடர்களின் ஆவி பிரியும் போது தாங்கள் தோன்றிய மண்ணுக்கே அவர்கள் திரும்புவார்கள் என்ற விவிலியத் தொடர்கள் மனிதனைக் குறித்து வரையறுக்கிறது.’ (திருவிவிலியம், ப.ஏ, பக். 5,7,617,622,789,744)

மனிதன் பார்த்தல், கேட்டல், சுவைத்தல், உணர்தல், நுகர்தல் என்ற ஐம்புலன்களையும் கொண்டு படைக்கப்பட்டான். விவிலியம் மனித இன இயல் பற்றிய கருத்துக்களை ஆன்மா, இருதயம், ஊன், உடல், ஆவி என்ற பொருளின் கீழ்க் விளக்குகிறது. எனினும் மனிதனை உடல், ஆன்மா என்ற இரு பகுதிகள் இணைந்த ஒன்றாகவே கருதுகிறது. மேலும் அவன் அழிந்து போகின்ற படைப்பு எனச் சுட்டுகிறது. ஆவி இறைவனை நோக்கிய அவனது சிறந்த தன்மையைக் குறிக்கிறது. உடல் அவனது வெளி அடையாளமாக விளங்குகிறது. கிரேக்க மெய்யியல் மனிதனை ஆவி பருப்பொருள் தன்மையுடைய இரு உலகை இணைக்கும் சிறு அண்டமாகக் கருதுகிறது. மறுபுறம் விவிலிய இறையியல் மனிதனை இறைவனோடு தொடர்புபடுத்தி இறைவனின் சாயலாக காண்கிறது.

'இறைவன் மண்ணையும் விண்ணையும் படைத்தார். மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையானதையும் படைத்தார். மண்ணில் ஒரு பிடி எடுத்து அதற்கு உயிர்ப்பூட்டி மனிதனைப் படைத்தார். அவனுக்குத் துணையாக ஒரு பெண்ணையும் படைத்தார். அனைத்து உயிரினங்களையும் இறைவனே படைத்தார். எனினும் அவருடைய மாபெரும் பிரபஞ்சத் திட்டத்தில் மனிதனே மையப்புள்ளி. மனித குலத்தின் மூலமே தன் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள விரும்பி உலகத்தையும் மனித வாழ்க்கையையும் வடிவமைத்தார். இறைவன் தன் பிம்பமாக மனிதனைப் படைத்தார். எனினும் மனித இயல்பிலே பாவத்தின் சாயல் ஆழப் பதிந்துள்ளது.' (க. நாராயணன், சித்தர் சிவவாக்கியர், ப.172). இவ்வாறு இறைவன் தம் சிந்தனை, உணர்வு, சித்தம் என்ற தம் பிம்பத்தை மனிதனுக்கு கொடுத்து அன்போடும் அறத்தோடும் வாழப் பணித்தார் என விவிலியம் கற்பிக்கிறது.

**சித்தர் பாடல்களில் மனிதப் படைப்பு**

மானிடப்பிறவி கிடைத்தற்கரியது. ஆகவே அரிதாகப்பெற்ற மனுடத்தை வீணாக்காமல் முக்தியைத்தேடு என்று சித்தர்கள் கூறுவர். 'தான் படைத்த படைப்புகளிலே மிக உயர்ந்த படைப்பாக ஆறறிவு கொண்ட மனிதனைப் படைத்து அம்மனிதனின் உடலையே தனக்குரிய இருப்பிடமாகக் கொண்டு குடியேறி இருக்கிறார்.' (அரங்க. இராமலிங்கம், சித்தர் இறைநெறி,ப.28) 'மனிதப் பிறவியே இறைவனை அடைவதற்கு அவருடன் கலப்பதற்கு ஏற்றதாயிருக்கிறது. மனிதப்பிறவியில் மட்டுமே சிந்திக்கின்ற உணர்ச்சியும் இறைவணை வழிபடும் சிந்தையும் கொண்டுள்ளது. ஆதலால் இந்த மனிதப் பிறவி கிடைத்தற்கரியது. உயர்வான இந்தப் பிறவியில் இந்த உடலின் துணையோடு இறைவனை அடைய வேண்டுமென சித்தர்கள் கூறுகின்றனர்.' (சி.எஸ். முருகேசன், சித்தர்களின் சாகாக்கலை, ப.111) நால்வகைத் தோற்றம் , ஏழுவகைப் பிறப்பு, என்பத்து நான்கு இலட்சம் உருவ வேற்றுமைகளோடு விளங்கும் உயிரினங்களுள் மனிதப்பிறவியே சிறந்தது அரியது. தன்னையே உணரும் தன்மையும் எண்ணிச் செயல்படுதிறனும் மனிதனுக்கு மட்டுமே உண்டு.

மனிதப் படைப்பை பற்றிய கோட்பாடுகளில் பிற சித்தர்களின் சிந்தனைகளிலிருந்து பாம்பாட்டியார் சற்று மாறுபட்டு நிற்கிறார்,

'மரப்பாவை போலவொரு மண்ணுருச் செய்து

வளமான சீவனென்னுஞ் சூத்திரம் மாட்டித்

திரைக்குள்ளி ருந்தசைப்போன் தீர்ந்தெழுந்த பொழுதே

தேகம்விழு மென் றுதெளிந் தாடாய் பாம்பே' (வா.சரவணமுத்துபிள்ளை, பெரிய ஞானக்கோவை, ப.209)

இப்பாடலில் மரத்தால் ஆன பொம்மையைப்போல் மண்ணினால் செய்த உருவம் இந்த மனித உடம்பு. உயிர் என்னும் கயிற்றில் மாட்டித் திரைக்குள் இருந்து ஆட்டுவிக்கிற இறைவன் தன் இயக்கத்தினை நிறுத்திய உடனே உயிர் நீங்கிப் பிணமாக கீழே விழுந்துவிடும் என்ற உணர்வைத் தெளிந்து ஆடுவாய் பாம்பே என்று விளக்கம் பெறுகிறது. மேலும் இறைவன் பெருங்காற்றை உயிர் வளியைப் புகுத்தி வைத்துப் படைத்ததால் தான் வாய் வழியே மனிதனுக்கு பேச்சு உண்டானது. என்பதைப் பாம்பாட்டிச் சித்தரின் வரிகளில்,

'பேசரிய நவவாயிற் பீற்றல் துருத்தி

பெருங்காற்றுள் புகுந்ததால் பேச்சுண் டாச்சே...' (மேலது, ப.208)

உலகமும் இந்த உடலும் இறைவனால் படைக்கப்பட்டதே என்பதை குதம்பைச் சித்தர் தம் வரிகளில்,

'அண்டமும் பிண்டமும் ஆக்கிய தேவனைத்

தெண்டனிட்டு ஏத்தடியே குதம்பாய்' (த.குப்புசாமிநாயுடு, ஞானசாஸ்திரத்திரட்டு, ப.214)

சிவவாக்கியரும் உயிர் உடலுக்குமான தொடர்பை விளக்கி உடலையும் உயிரையும் ஒன்ற வைப்பது சிவனே என்று குறிப்பிடுகிறார்.

'உயிரினால் உடம்பெடுத்த உண்மை ஞானி சொல்லடா'

'உயிரையும் உடம்பையும் ஒன்றுவிப்பது அச்சிவம்

உயிரினால் உடம்புதான் எடுத்தவாறு உரைக்கினேன்'

(வா. சரவணமுத்துப்பிள்ள, ப.35)

மேற்கண்ட சிவவாக்கியரின் பாடல்கள் தெளிவற்ற நிலையில் காணப்படுகிறது. இரண்டு பாடல்களில் சிலவற்றை நீக்கி விட்டு ஒரே பாடலாக அமைத்துள்ளது யாரோ சாமானியனின் செயல் என்பது புலனாகிறது. இந்தப் பாடலில் உடலையும் உயிரையும் ஒன்ற வைப்பது சிவன் என்றால் இறுதியில் உடலை விட்டுப் பிரியும் எல்லா உயிர்களும் சிவனை அடைகின்றன என்பதே சிவவாக்கியரின் கருத்தாகும். இக்கருத்து விவிலியத்தோடு ஒத்துள்ளது. மனிதனுடைய இறுதி நிலையை "ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே ... வறையோட்டுக்கும் ஆகாதென்று ஆடாய் பாம்பே" (பா.60) என்று பாம்பாட்டிச் சித்தரும் மனித உடலைப் பற்றி பாடியுள்ளார்.

### நிறைவாக

மனிதன் இறைவனால் படைக்கப்பட்டவன் என்றும் பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவில் பரம்பொருளாகிய இறை ஞானத்தைப் பெற்று முக்தி பெற வேண்டும் என விவிலியமும் சித்தர் பாடல்களும் விளக்குகின்றன. மேலும் மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட மனிதன் இறுதியில் மண், நீர், தீ, வளி என்னும் அடிப்படைகளில் பிரிந்துவிடுகிறான். மேற்காணும் கருத்தியலில் இவ்விரு நூல்களும் ஒத்துள்ளதாகவே தெரிகின்றன.

### துணை நின்ற நூல்கள்

1. திருவிவிலியம், தமிழ்நாடு விவிலிய மறைக் கல்வி நடுநிலையம், திண்டிவனம். 2013
2. சரவணமுத்துப்பிள்ளை வா, பெரிய ஞானக்கோவை, பி. இரத்தின நாயக்கர் சன்ஸ், சென்னை. 2016
3. கிருட்டிண பிள்ளை எ.ஆ, ஞானசிகாமணி வீ. முனைவர், ப. ஆ, இரட்சணிய சமய நிருணயம், மோரியா ஊழியங்கள், சென்னை. 2019
4. குப்புசாமிநாயுடு த, ஞானசாஸ்திரத் திரட்டு தொகுதி 2, இராம. குருசாமிக் கோனார் சன் புஸ்தக ஷாப், புதுமண்டபம், மதுரை. 1938
5. இராமலிங்கம் அரங்க.முனைவர், சித்தர் இறைநெறி, கலைஞன் பதிப்பகம், தி. நகர், சென்னை. 2007
6. நாராயணன் க, சித்தர் தத்துவம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. 1990
7. முருகேசன், சித்தர்களின் சாகாக் கலை, சங்கர் பதிப்பகம், சென்னை. 2002
8. செல்வநாயகம் இசுரேல். முனைவர், விவிலிய இறையியல் செஞ்சொல் கட்டுரைக் கோவை, தமிழ் இறையியல் நூலோர் குழு, மதுரை. 1993

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ISSN: 2582-399X

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

ஆண்டு 2021, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் அக்டோபர் - 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com
✉ aranjournal@gmail.com
✆ 72995 87879